18th In the Thanksgiving Celebration to Mr. Jos Dijkers, novices given their melody songs it makes the Holy Eucharist more meaningful, also entertain them with a small cultural program. Mary our Mother sustains us in our moments of darkness difficulty. Novices enlightened by the Mariology class dealt by Fr. Jegan OSM.Poovai social service center contacted the Christmas program, in that carols songs by our Novices. After the mission and community experience Second year novices came back to novitiate.

23rd Superior General Arockiam, Sr. Celia, General Economer and Sr. Anbu shared their Christmas Joy and happiness with our Novices, That day Novices welcomed Our Dignitaries with water, they enjoyed our Christmas Events. Novices made Christmas crib based on the theme of Pilgrims of HOPE.

Sr. **Christhu Rani,** FSJ
Formation Commission Co-ordinator








# VOCATIONAL COMMISSION

இறையழைத்தல் பணிக்குழு சார்பாக 28, 29, 30 நவம்பர் 1, 2 டிசம்பர் தேதிகளில் ஒருங்கிணைப்பாளர் sr.Agnes Santiago சமயபுரம் OMD Mat. Hr. Sec. School, புறதாக்குடி St. Xavier's Hr. Sec. School, இருங்களூர் St. Sebastian பங்குத்தலம், கொணலை, புனித அந்தோனியார் பங்குத்தலம் ஆகிய இடங்களில் இளம் மாணவிகளை சந்தித்து நமது சபையின் அறிமுகம் மற்றும் நமது தனிவரம் மையப்படுத்தும் பணிகள் பற்றி கூறி இறை அழைத்தலுக்கு ஊக்கமும் உற்சாகமும் தரப்பட்டது. விருப்பம் தெரிவித்த மாணவிகளின் விவரங்கள் பெறப்பட்டு, ஆங்காங்கே உள்ள அருட்பணியாளர்கள் ஒத்துழைப்புடன் அவர்களது குடும்பங்களோடு தொடர்பு கொண்டு உடன் பயணித்து வருகிறோம்.

---








புனித வளனார் மாநிலம் இறையழைத்தல் பணிக்காக பணி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி ஆக்னஸ் சந்தியாகு தலைமையில் சிறப்பு இறையழைத்தல் முகாம் புறத்தாக்குடி ST.XAVIER'S HR.SEC.பள்ளியில் 27.12.2024 அன்று நடைபெற்றது. இதில் அருட்சகோதரிகள் Sr.சோபியா, Vepery, Sr. வேளாங்கண்ணி யுனயஅடியமமயஅஇ ஏுச. மெல்சிமேரி நேதாஜி நகர் ஆகியோருடன் இணைந்து நடத்தப்பட்டது. 2 மாதங்களுக்கு முன்பே நமக்கு அறிமுகமான 10, 12–ம் வகுப்பு பயின்று கொண்டிருக்கும் 35மாணவிகள் பங்கு கொண்டு சபையை பற்றிய அறிமுகத்தைப் பெற்றுக்கொண்டனர். சகோதரிகள் மாணவிகளுக்கு அழைத்தல் மதிப்பீடுகளை தரக்கூடிய சில விளையாட்டுக்களை நடத்தி உற்சாகப்படுத்தினர். மேலும் இது ஒரு சிறப்பு பாசறையாகவும் இறையழைத்தல் முகாமாகவும் அமைந்தது. மாணவிகள் சபையை பற்றி அறிய வாய்ப்பாக இருந்தது. புறதாக்குடி பங்குத்தந்தை அருட்பணி. கஸ்பார் உதவியுடன் மற்றும் பள்ளி முதல்வர் அருட்பணி ராபர்ட் செல்வம் சிறப்பான அறிமுகம் செய்து இந்த நிகழ்ச்சியை துவங்கி வைத்து எங்களுக்கும் மாணவிகளுக்கும் உறுதுணையாக இருந்தனர்.

2–ம் நாள் (28.12.2024) திருச்சி ஆலன் மாநிலம் – வண்ணம்பட்டி இல்லத்தலைமை அருட்சகோதரி குளோரி அவர்களின் துணையுடன் 16 மாணவிகள் 6–10 ம் 12–ம் வகுப்பு படித்து கொண்டிருப்போரையும் அவரவர் இல்லத்தில் பெற்றோருடன் சந்தித்து இறையழைத்தல் பெற்றுக்கொள்ள உற்சாகப்படுத்தினோம்.

Sr. **Christhu Rani,** **FSJ**
Vocation Commission Co-ordinator

## 1. கிறிஸ்து பிறப்பு விழா அர்த்தமுள்ள கொண்டாட்டம்




அன்னை சிவகாமி நகர் எண்ணூரில் அமைந்துள்ள சகாய மாதா தொடக்கப்பள்ளியில் கிறிஸ்து பிறப்பு திருவிழா குழந்தைகளுடன் அர்த்தமுள்ள வகையில் மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு லயன் .வி. தியாகராஜன் அவர்கள் தலைமையில் திருவொற்றியூர் மறைவட்ட அதிபர் அருள்தந்தை லியோ ஜோசப் அவர்களின் ஆசிருடன் தாளாளர் அருள் சகோதரி செசிலி மற்றும் சகாய மாதா உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயந்தி, சகாய மாதா தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் அருள் சகோதரி மெல்சி மேரி ஆகியோர் பங்கு பெற்று சிறப்பித்தனர். கிறிஸ்து பிறப்பு என்றாலே அன்பு, அன்பின் சாரம் பகிர்வு; பகிர்வின் சாராம்சமாகவும் விழாவின் சிறப்பு நிகழ்வாகவும் சபை நிறுவனர் தந்தை ஜான் ஆலன் குழந்தைகளுக்கு ரூபாய் 15,000 மதிப்புள்ள சமையல் பொருட்களும் பரிசுகளும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் ஆசிரியர்களின் அழகான பாடல்களும் நாடகங்களும் கலை நிகழ்வில் சிறப்பிடம் பிடித்தன. மாலை முரசு செய்தியாளர் எங்களிடம் செய்தி சேகரித்தனர். விழா இனிதே முடிவுற்றது.

## 2. பெரம்பலூர், புனித தோமினிக் பள்ளியின் யூபிலி விழா

“நல்லவராம் ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்”. கடந்து வந்த பாதையை மதித்து, எதிர்கால சவால்களை தழுவி, நிகழ்காலத்தை கொண்டாட்டமாக மாற்ற கிடைத்த ஒரு அரிய அற்புதமான வாய்ப்பு தான் யூபிலி கொண்டாட்டம். பெரம்பலூர் புனித தோமினிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளி கடந்து வந்த 60 ஆண்டுகளில் (1963 – 2023) பயணித்த பாதையை நினைத்துப் பார்த்து இறைவனுக்கும், நம் சபை முன்னாள் தலைமை அன்னையர்கள், தாளாளர்கள் மற்றும் தலைமையாசிரியை அருட்சகோதரிகளுக்கும் நன்றி கூறும் தருணமாக அமைந்தது.

07.12.2024 சனிக்கிழமை எம் பள்ளி 60ஆம் ஆண்டு வைர விழாவினையும், அருட்சகோதரி. எலிசபெத் ரீனா அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழாவினையும் சிறப்பித்தது. இவ்வைர விழாவிற்கு கும்பகோணம் மறை மாவட்ட மேதகு ஆயர். ஜீவானந்தம் அவர்கள் மற்றும் மறைமாவட்ட குருக்கள், எம் சபைத்தலைமை அன்னை M. ஆரோக்கியம் அவர்கள், முன்னாள் தலைமை அன்னை வெனான்சியா அவர்கள், பேராயர் தந்தை. ஜான் ஆலன் மாநிலத்தலைவி அருட்சகோதரி. வேளாங்கண்ணி ஷெரின், எம் சபை பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. K.A. சூசைமேரி, எம் பள்ளியின் தாளாளர் அருட்சகோதரி. மேரி எமரென்சியா மற்றும் எம் சபை சகோதரிகள், முன்னாள் மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

யூபிலி விழாவானது இறையருள், இறைஆசீருடன் நடைபெற வேண்டும் என்பதற்காக தெய்வீக பலியுடன் ஆரம்பமானது. தெய்வீக நன்றியின் திருப்பலியை மேதகு ஆயர் டாக்டர். ஜீவானந்தம் அவர்கள் நிறைவேற்றி இறைஆசீரை பெற்று தந்தார்கள். இவ்வைர விழா கொண்டாட்டத்தின் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ திரு. முருகம்மாள், பெரம்பலூர்






மாவட்ட கல்வி அலுவலர் திரு. செல்வகுமார், அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் திருமதி. கல்பனா த்ராய், தமிழ்நாடு பட்டதாரி மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் கழக மாநில தலைவர் திரு. மகேந்திரன், எம் பள்ளியின் முன்னாள் மாணவிகள் இந்நாள் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திருமதி. சிவகாமி, திருச்சி தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அலுவலர் திருமதி. பேபி, மருத்துவர்கள் திருமதி. ஜெயந்தி, திருமதி. வசந்தி, செல்வி. கீர்த்தனா மற்றும் முன்னாள் மாணவிகள் பலரும் கலந்து கொண்டார்கள். புனித பூமியான ரோம் நகரில் திருத்தந்தையிடம் இருந்து வந்த வாழ்த்து செய்தியை மேதகு ஆயர் வாசித்து ஆசி வழங்கினார்.

கல்வி அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவரின் சிறப்பு வருகை பெரம்பலூர் பகுதிக்கும் எம் பள்ளிக்கும் மகிழ்ச்சியோடு கூடிய பெருமையை தந்தது. மாணவிகளுக்கு செய்தியாக கல்வி என்பது கடல். இந்த பக்கத்தில் இருந்து தான் அல்லது அந்த பக்கத்தில் இருந்து தான் குதிக்க வேண்டும் என்பதல்ல. அதற்கு திசை எல்லாம் கிடையாது. வகுப்பறை மட்டுமே கல்வியை தருவது அல்ல. நூலகம், விளையாட்டு மைதானமும் கூட ஒரு வித கல்வியை நமக்குத் தருகிறது அதுவும் ஒரு வகையில் வகுப்பறை தான். சந்தேகங்களை கூச்சப்படாமல் கேட்டு தீர்த்துக் கொள்ள வேண்டும். கூச்சப்பட்டால் எந்த கட்டத்திற்கு உயர்ந்தாலும், கூச்ச சுபாவம் நம்மை துரத்திக் கொண்டே வரும். அதுநல்லதல்ல பள்ளிக்குடம் புரியாததை புரிய வைக்க அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் உங்களின் இரண்டாம் பெற்றோர். சுயநலம் இல்லாத ஜீவன்கள் என்று தன் பேருரையில் கூறினார்கள். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார், மாணவிகளின் கலைநிகழ்சிகளை கண்டு மகிழ்ந்தனர். சபை தலைமை அன்னை முதல் வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்துக்களையும் ஆசீர் உரைகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள். யூபிலி கொண்டாட்டம் நினைவாக வைர விழா மலர் மற்றும் புனித தோமினிக் வாழ்க்கை வரலாறு பேராயர் தந்தை ஜான் ஆலன் வாழ்க்கை வரலாறு சிறுநூல்களாக வடிவமைத்து தலைமை அன்னை ஆரோக்கியம் அவர்களும் முன்னாள் தலைமை அன்னை வெனான்சியா அவர்களும் வெளியிட்டார்கள் அனைத்து நிகழ்வுகளும் சிறப்புடன் முடிய இரவு உணவு வழங்கப்பட்டது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்ற மனநிலையில் மனமகிழ்வுடன் இல்லம் சென்றனர்.

---

## 3. NEW TOILET BLOCK BLESSING AND CHRISTMAS CELEBRATION

On December 11, 2024, a joyful event marked the blessing of a newly constructed toilet block and the celebration of Christmas in the company of Mother and visiting foreigners. This occasion was a blend of community spirit, cultural exchange, and festive cheer. The program commenced with a formal blessing ceremony for the toilet block. The new facility stands as a testament to the collective effort and commitment of the community and partners toward enhancing hygiene and sanitation standards.

Following the blessing, the atmosphere transitioned into a Christmas celebration filled with joy and warmth. Mother graced the gathering with her presence, sharing words of love and encouragement. Visiting foreigners also joined the festivities, enriching the event with their perspectives and cultural insights. The event concluded with the distribution of small tokens of appreciation and gifts, leaving everyone with smiles and fond memories.

This day will be remembered not only for its significance in inaugurating a vital facility but also for the unity and festive spirit it brought to the community.






Rev. Sr. **Susai Mary, FSJ**
General Councilor,
Education Co-Ordinator

# HEALTH COMMISSION

## 1. Christmas Medical Camp for 100 Women in Need





St. Thoams Hospital joint with Help and Hope team and conducted free medical camp and Christmas gift sharing on 15.12.2024 at St. Thomas hospital for 100 needy women in and around St. Thomas Hospital area. We had prayer service which was organized by Fr. Lazer SVD and Christmas Carols sung by our staff. We shared Rs. 1750 worth gifts and blood test, ECG, Cervical cancer screening test and Ultrasound scan free of cost. We offered free consultation along with Gynaecologist, Orthopaedist and Ophthalmologist. Sujok therapy was organized by Sr.Pauline Daisy and many are benefited. We thank St. Thomas Hospital management, Sr.Pauline Daisy and Hope and Help team for the memorable event.

## 2. Day with Transgender




A heartwarming Christmas celebration with the transgender community was organized on 21.12.2024 at St. Thomas Hospital. The event was graced medical camp at 7:30 AM and followed by breakfast. At 10:00 AM, the Christmas program commenced, featuring joyful performances and festive activities by our Mother General, Sr. M. Arockiam. The program began with a Provisions and gifts were distributed to them spreading the spirit of love and care. We thank St. Joseph Group of school's owner Mrs. Bindhu for sponsoring the event. Following the program, the medical camp resumed, offering free master health check-ups to all transgender individuals and free consultation with Orthopaedist, General Physician, General Surgeon, Dentist, Ophthalmologist and Sujok therapy, reflecting the hospital's commitment to inclusivity and holistic well-being. The gathering end with good lunch. The celebration was a beautiful blend of healthcare and festive cheer, leaving everyone with a sense of joy and gratitude.

## 3. Grace filled Christmas

Christmas Celebration organized in St. Thomas Hospital on 22.12.2024. Our congregation aged sisters living in Quazi and Lousi convent were participated and blessed all our Doctors and Staff. Our superior General Mother M. Arockiam visited all our sick sisters and shared Christmas Love.






## 4. Christmas is Joyful season for the Sick and the Needy

A Joyful Christmas Sharing with the sick and the needy in an around St. Thomas Mount was organized by St. Thomas Hospital on 23.12.2024. we started with prayer service by Fr. James SVD, shared gift and breakfast around 200 people with the help of Help and Hope team. We thank Sr. Emila Fernando and Sr. Joice Fermi for helping the people to get benefit.

---

## 5. Dispensary Renovation






Infant Jesus dispensary - Killukottai renovation work began on September 2, 2024, in the presence of our Provincial, Sr. Sherine, and Engineer Fr. Jeikar, with a prayer. The renovation was completed in December, and on December 8, our dispensary was blessed by Fr. George (Parish Priest) and inaugurated by Fr. Jeikar and Sr. Soosai Mary (General Councillor). The Holy Mass was celebrated by Fr. George, Fr. Savarimuthu (TMSSS Director) and Fr. Jeikar. The event concluded with a lunch.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

# COMMUNICATION COMMISSION

## 1. திருவருகை கால தயாரிப்பின் நான்கு வாரங்கள்

இறைமகன் இயேசு பாலன் நம் உள்ளத்திலும், நம் இல்லத்திலும் பிறக்க திருவருகை காலத்தில் நம்மையே நாம் தயாரிக்க நான்கு வாரங்களும் நமக்கு நல்லதொரு சிந்தனைகளை எழுத்து வடிவில் கொடுத்த Sr. Amala Jeyanthi, Sr. Velanganni Rani Anitha, Sr. A. Velanganni அவர்களுக்கும் மேலும் இச்சிந்தனைகளுக்கு தங்களின் சிம்ம குரலினை Audioவாக கொடுத்த Sr. Judith, Sr. Ganam, Sr. Jansi, Sr.Josephine ஆகியோருக்கு தகவல் தொலை தொடர்பு பணிக்குழு சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளும், பாராட்டுகளும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## 2. வளன் விடு தூது




புனித வளனார் மறை மாநில தகவல் தொடர் பணிக்குழுவின் சார்பாக வளன் விடு தூது என்ற மாத இதழ் கிறிஸ்து பிறப்பு பற்றிய கட்டுரைகள், கவிதைகள், கதைகள், ஓவியங்கள் மற்றும் பயனுள்ள குறிப்புகளை உள்ளடக்கி வெளியிடுகிறோம்.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு

## 1. கிறிஸ்து பிறப்பு விழா

19.12.2024 அன்று கிறிஸ்து பிறப்பு விழாவானது ரெடில்ஸ் உள்ள 50 திருநங்கைகளுடன் கொண்டாடப்பட்டன. இந்நிகழ்விற்க்கு சபை பொது ஆலோசக சகோதரி. அருள்மேரி அவர்கள் தலைமையேற்று திருநங்கைகளுக்கு தலைமையகத்தின் சார்பாக பரிசு பொருட்களை வழங்கினார்கள். அருட்பணி. பிரசாந்த் மற்றும் அருட்பணி. ஆசீர்வாதம் அவர்கள் கிறிஸ்துபிறப்பு ஆசீர் வழங்கி செபித்தார்கள். கலைநிகழ்ச்சிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்க்கு நம் சபை சகோதரிகளும் கலந்து கொண்டார்கள். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த அருட்சகோதரி. பிரிசில்லா அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள்.



## 2. சிறைவாசிகளுடன் கிறிஸ்து பிறப்பு விழா





14,18.12.2024 ஆகிய தினங்களில் செங்கல்பட்டு மறைமாவட்டத்துடன் இணைந்து செங்கல்பட்டு காஞ்சிபுரம், மதுராந்தகம் ஆகிய இடங்களில் கிறிஸ்து பிறப்பு விழாவானது சிறப்புடன் கொண்டாடப்பட்டன. 350 சிறைவாசிகள் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். இவர்களுக்கு மத்தியான உணவும், அன்பளிப்பும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆயரின் பொது பதில் குருவும், அருட்பணியாளாகளும் கலந்துக் கொண்டு சிறைவாசிகளுக்கு ஆசீர் வழங்கினார்கள். இவ்விழாவில் சிறைப்பணி செய்து கொண்டிருக்கும். நமது சபைசார்பாக இரண்டு அருட்சகோதரிகள் கலந்து கொண்டார்கள்.

### 3. Christmas with FSJ FIT Foundation Students

22.12.2024 அன்று FSJ FIT Foundation பெண்களுக்கு சபை தலைமையன்னை M. ஆரோக்கியம் அவர்கள் தலைமையில் தலைமையகத்தில் 18 இளம்பெண்களுடன் கிறிஸ்து பிறப்பு விழாவானது சிறப்புடன் கலை நிகழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டன. தலைமையகத்திலுள்ள அருட்சகோதரிகளும், சமூகப்பணி செய்யும் பொது ஆலோசக சகோதரி. அருள்மேரி மற்றும் அவருடன் இணைந்து பணிபுரியும் அருட்சகோதரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதியாக தலைமை சகோதரி அவர்கள் பரிசு வழங்கி ஆசிர் வழங்கினார்கள்.










## 4. கிறிஸ்துமஸ் பகிர்வின் விழா:

கிறிஸ்துமஸ் விழா பகிர்தல் கொண்டாட்டமானது இரும்பேடு கிளைப்பங்குமக்கள், மழுவன்கரனை இளம் பெண்கள், பெண்கள் குழுக்கள் மற்றும் புனித வளனார் முதியோர் இல்லம் இவர்களோடு சேர்ந்து கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தோம். இதனை ஒருங்கிணைத்த பிருதூர் இல்லத்தலைவி Sr. Rexline Michael, உடன் சகோதரிகள். Sr. Philomina Mangalam மற்றும் Sr. Ephipany Mary இவர்களுக்கு எங்களின் நன்றிகள்.

## 5. மாற்றுதிறனாளிகளின் தினம்:





**A.** 03.12.2024 அன்று பெரிய காலனி (வந்தவாசி) கிராமத்தில் வசிக்கும் திரு. கார்த்திக் என்ற மாற்று திறனாளிக்கு ரூபாய் 25000 செலவில் மூன்று சக்கர வண்டிக்கு பேட்டரி (Battary) வழங்கப்பட்டது. மாற்றுதிறனாளிகளின் தினத்தை முன்னிட்டு 15 மாற்று திறனாளிகளை அழைத்து அவர்களை கவுரவித்து உணவு மற்றும் பரிசு பொருட்களை வழங்கினோம்.

---




**B.** 03.12.2024 அன்று சித்தார்த் நகர் மாவட்டம், கோரக்பூரில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதில் 70க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

## 6. ஆலன் முதியோர் இல்லத்தில் கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்ச்சி

திருச்சி ஆயர் ஜான் ஆலன் மாநிலம் சமூக பயன்பாட்டு பணி சார்பாக மாநிலத்தின் கீழ் இயங்கும் மதுரை ஆலன் முதியோர் இல்லத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாநில தலைமை சகோதரி வேளாங்கண்ணி ஷெரின் மற்றும் நிர்வாக குழு சகோதரிகள் அனைவரும் தலைமையேற்று நடத்தி தந்தார்கள் விழாவிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அவ்வில்லத்தின் இல்ல தலைவி சகோதரி. தஸ்நோவிஸ் மற்றும் சகோதரி. சம்மனசு அவ்வில்லத்தின் சிறப்பு நன்கொடையாளர் திரு. பிரவீன் ஆகியோர் ஏற்பாடு செய்து விழாவை சிறப்பித்து இருந்தனர் அங்குள்ள முதியோர் 17 பேருக்கும் சிறப்பு பரிசுகள் மற்றும் அவ்வில்லத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை தெரிவிக்கும் வகையில் பரிசு பொருட்கள் வழங்கி மகிழ்வித்தனர். விழாவில் முதியோர்கள் சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். விழா இனிதாக நிறைவு பெற்றது.





**Sr. Arul Mary**
*Social Work Commission*
*Co-ordinator*

WEEK OF PRAYER FOR CHRISTIAN UNITY

# “DO YOU BELIEVE?”

(John 11:26)

**JANUARY 18–25, 2025**




The theme for the 2025 Week of Prayer for Christian Unity was approved by the Catholic Church’s Dicastery for Promoting Christian Unity and the Faith and Order Commission of the World Council of Churches, in collaboration with the ecumenical monastic community of Bose in Italy.

The entire passage chosen for reflection is John 11:17-27, where Jesus arrives in Bethany and raises Lazarus from the dead. A part of that story is the encounter between Jesus and Martha, at the end of which Martha confesses faith in Jesus as the Messiah and Son of God. This year’s theme was chosen in recognition of the 1700th anniversary of the First Council of Nicaea (325), at which the words “I believe” were chosen to anchor the Creed as an instrument of universal Christian unity.

---

## Congratulations!

*We extend our Heartfelt congratulations to Bishop* **AMBROSE PITCHAIMUTHU** *on his appointment by his Holiness Pope Francis as the* **New Bishop of Vellore**







---




## Congratulations!

Dear Sr. Agnes Santiagu

---



**Vimala Matric Hr Sec School,**
*Thuraiyur*

**TTSE Scholarship**



**St. Joseph’s Matric. Hr. Sec. School,**
*Maraimalai Nagar.*
**Tamil Talent Search Exam Achiever 2024 - 2025**



# 76th Republic Day

*"A Call to Faith, Unity, and National Responsibility"*

Republic Day, celebrated on January 26th, holds profound significance as a day to honor the adoption of India's Constitution, a guiding beacon of democracy and freedom. Beyond its historical and political relevance, it invites citizens of all faiths to reflect on the divine guidance that has shaped our nation's destiny and commit to the moral and spiritual principles that uphold our democracy.

As we celebrate India's remarkable progress whether in technological achievements like Chandrayaan-3 or strides in global diplomacy it is vital to recognize a higher purpose behind these milestones. These successes reflect the collective faith, prayers, and hard work of a diverse nation united under God's providence.

However, our journey as a nation is not without challenges. Issues such as inequality, environmental degradation and moral erosion remind us of our shared responsibility as stewards of God's creation. The Constitution's ideals of justice, liberty, equality, and fraternity resonate deeply with the core teachings of all faiths, which emphasize peace, love, and the dignity of every individual.

Republic Day is, therefore, a moment for prayer and introspection. Let us seek divine wisdom for our leaders and ourselves, committing to fostering unity in diversity. The vibrant cultural displays and military parades on Kartavya Path serve as reminders of the strength that lies in our nation's diversity and the unity that binds us together under one flag.

As faithful citizens, our celebration must transcend ceremonial observances. True patriotism lies in acts of service caring for the marginalized, promoting harmony, protecting the environment, and upholding the values enshrined in our Constitution. These actions reflect our gratitude to God for the blessings of freedom and democracy.



On this Republic Day, let the tricolor inspire us to live out our dual responsibilities as citizens and believers—bridging divides, championing justice and spreading compassion in our communities. May our actions honor the sacrifices of those who built this republic and contribute to the vision of a nation rooted in truth, justice and love.

***Jai Hind!***
***God Bless Our Nation!***

**Sr. M. Pushpa FSJ**

# பணி நிறைவு – வாழ்த்து மடல்

**அருட்சகோதரி. ஆ. எலிசபெத் ரீனா வ.பி.ச (07.12.2024)**

நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்கள்
நிறைந்த நகரமாம்
குடந்தை மறைமாவட்டத்திலே!
தஞ்சாவூர் மகாராஜா போருக்குச்
செல்லும் போது
தங்கிச் சென்ற தஞ்சாவூரான் சாவடியிலே!

மரியன்னையின் நாமம் கொண்ட திருவாளர்
ஆரோக்கிய சாமி
எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்கின்ற
தூதர்களின் பெயர் கொண்ட திருமதி. சம்மனசு
மேரியின் கருவில் ஜெனித்த நல் முத்தே விஞ்சு
புகழ் எலிசபெத்தே!

பெற்றோர் பெற்றப் பிள்ளைகளிலே
பெருமை மிக்க எழுவரிலே
கற்றோர் வியக்கும் கடைக்குட்டியே!
கருணை சார் காருண்யமே!

அருட்பணியை இயேசு தம் திருப்பணிக்குத்
தேர்ந்தெடுக்க
பெற்றோரும் உம்மை இறைப்பணிக்கு
நேர்ந்தளிக்க
கரைப்படியாக் கரங்களோடு
இறைப்பணியில் இணைவிக்க
புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபையினில் நீர்
சங்கமிக்க
தொடர்ந்து இறைவழியில் பயணிக்க குவலயம்
போற்ற நீர் வாழியவே!

முதலாம் வார்த்தை பாடுதனை
மகிழ்வாய் பெற்ற மாண்பாளரே
இதமாய் நிரந்தர வார்த்தைப்பாடு
இன்முகத்துடன் பெற்றாய் அன்புடனே.

அர்ப்பண வாழ்வின் வெள்ளி விழா
கண்ட நாயகியே
ஆண்டவன் அருளோடு பொன்விழா காண
வானங்கள் வார்த்தை மழை பொழிய
உம்மை வாழ்த்துகின்றோம்.



ஆவடி அந்தோணியார் பள்ளியில் காலடி
வைத்தவரே
எம் தோமினிக் பள்ளியிலும் தடம்பதித்தவரே!

திறமையை வளர்க்கும் கை தொழிலாமே ஆதாரம்
தையல் கலை ஒரு பங்காமே!
சிறப்பாக நின் தூணையாலே
மாணவியரை நன்கு வடிவமைத்தவரே!

மெல்லிய விரலின் அதிவேகம் சேர்த்து
தையல் கலைஞராய் எம் பள்ளியில்
நின்விரல் விளையாடும் கைவண்ணத்தை பார்த்து
தையல் இயந்திரமும் தைப்பதை மறந்திடுமோ!

கைத்தொழில் பல கற்றத்தந்து
மாணவியரின் மூன்றாம் கையாய் இருந்தவரே
வெறும் கை மாணவியரை தன் கைட்டுமே நம்பி
தன்னம்பிக்கையோடு செயல்பட வைத்தவரே

கவனின் மிகு மேடை அலங்காரம்
கைதொழில் பொருட்கள் பல வண்ண
கூடைகளும்
மிளிர்ந்தது உம் கை வண்ணத்தாலே

எம் பள்ளி வாத்தியக் குழுவும்
என்றென்றும் உம் பெயர் சொல்லும்
பல்திறனும்பெற்ற தையல் ஆசானே
நீவீர் வாழ்க!

ஓய்வில்லா உம் உழைப்பிற்க்கு
ஓய்வின்று உம் பணிநிறைவு
பதினாறு ஆண்டுகள் ஆம் பதினாறு ஆண்டுகள்
உழைப்பின் முத்தாய்ப்பே இப்பணிநிறைவு
ஓய்வு என்பது அரசு பணிக்கு தான்
உம் புனிதமான இறைப்பணிக்கு அல்ல

காலம் காட்டிய வயதுக்கணக்கில்
உம் அகவை அறுபது இன்று!
உம் சுறுசுறுப்பும் விரைவு நடையும்
சொல்கிறது
ஆற்றல் கொண்ட இருபது என்று

ஓங்கு புகழ் நலமெல்லாம்
ஓங்கார பொருளின் துணையோடு சேரவே
காக்கும் கர்த்தரின் கரமே
கனிவோடு உம்மை தாங்கவே
உடல் உள்ள நலமும் இறை அருளும்
நின் வாசல் தேடி உன்னை வாழ்த்தவே!

நெடுப் புகழ் ஆயுளோடும்
இறைக்கரம் தான் சூழ்ந்து காத்திட
செப அலைகளை உமக்காய் அனுப்பி
மனஅலைகளில் பிரிய மனமின்றி
வாழ்த்தி செபிக்கின்றோம்...

**பெரம்பலூர் இல்ல அருட்சகோதரிகள்**

---

## புது உலகம் படைப்போம் - 2025

கடந்த காலத்தை, நன்றி கலந்த உள்ளத்தோடு நினைத்துப் பார்ப்போம்.

2025 இந்த புதிய நம்பிக்கையோடும், எதிர்ப்பார்ப்போடும், அறிவோடும், அன்போடும் புதியதாய் துவங்குவோம்.

புதிய எண்ணங்கள், புதிய நம்பிக்கை, புதிய சினேகம் இவைகள் புதிய வெற்றிக்கான பாதை என்று நினைவில் நிறுத்துவோம். இந்த நினைவுகள் இளம் தலைமுறைக்கு ஆகச் சிறந்த மகிழ்ச்சி தரும்.

வெறும் சுய விருப்பங்களை
நிறைவேற மட்டும் அல்ல
நிறை வாழ்வு எங்கு உள்ளது என்றால்
பொது நலனுக்காக உழைப்பதில் தான்

இங்கு தான் வலிகள் உண்டு, ஏமாற்றங்கள் உண்டு
சோதனைகள் உண்டு, துன்பங்கன் உண்டு, இறுதியில்
நம்மையே இழக்க செய்கின்ற நேரங்களும் உண்டு

இப்புத்தாண்டில்
புதிய இலக்குகளை நோக்கி
கல்வி, சமூக, பொருளாதார நிலையில்
சாதனைகளை உருவாக்கி
ஆகச் சிறந்த மனிதர்களாய்
மாற்றத்தை நோக்கி பணயிப்போம்
அங்கு
புது உலகம் நமதாகும்....



**சகோ. கிறிஸ்டினா .அ**
டேவிட் கான்வென்ட்
ஜோலார்பேட்டை



# பொங்கல் விழா

பொங்கல் விழா – தமிழர் விழா
உழவுக்கும், இயற்கைக்கும் நன்றி நல்கும் – மங்கள விழா
உயிர்வாழ உணவு தரும் உழவனுக்கும்,
உறுதுணை புரியும் கதிரவனுக்கும்
உழுது உழைக்கும் மாட்டிற்கும்
நன்றி காட்டி புத்துணர்வு பெறும் – மகிழ்ச்சியின்விழா

சூரிய ஒளியால் பயிர்களைச் செழித்து வளரச் செய்த
இறைவனுக்கு நன்றியின் படையலை படைக்கும் – நன்றியின் விழா
நன்செய், புன்செய் நிலமாக, வானம் பார்த்த பூமியில்
உழுது, நாற்று நட்டு, களையெடுத்து, உரமிட்டு,
நீர்பாய்ச்சி, கண்ணின் மணிபோல் பார்த்து பார்த்து
உழைத்த, உழவரின் – தனிபெரும்விழா

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி முத்தாக
விளைந்திருக்கும் நெல்மணியை பக்குவமாய்
அறுத்து எடுக்கும் – அறுவடைவிழா
உற்றார், உறவினர் ஒருவர் ஒருவரைச் சந்தித்துத்
தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து அளிக்கும் – பகிர்வின் விழா
மத, இன வேறுபாடின்றி நம் தமிழக மக்கள்
கொண்டாடும் இது ஒரு – முப்பெருவிழா

போகிப்பொங்கல், தைப் பொங்கல், மாட்டுப்பொங்கல்
கானும் பொங்கல் என்று கலாச்சாரம், பண்பாடு,
பாரம்பரியம், மொழி, தொழில், விளையாட்டு, வீரம்,
உறவு, இறைநம்பிக்கை மற்றும் வாழ்க்கை முறையின்
வெளியடையாளமாய் கொண்டாடப்படும் ஓர் – சமத்துவ விழா
தை பிறந்தால் வழி பிறக்கும்! என்று
புத்தாடை அணிந்து புத்தரிசி படைத்து நாடு எங்கும்
கொண்டாடும் ஓர் – ஒற்றுமைவிழா

எனவே புதுமை நிறைந்த இப்பொங்கல் விழா
இனிமை நிறைந்த நன்றியின் விழாவாக
நம் உள்ளத்தில் தழைத்தோங்கட்டும்!

அனைவருக்கும் இனிய தை திருநாள் நல் வாழ்த்துகள்



**சகோ. சினேகா**
அசிசி இல்லம், அயன்நத்தம்பட்டி

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## JANUARY

2025

1st Sr. Mary Beatrice
Sr. Mary Margaret
Sr. Sekari Manickaraj
Sr. Philomina Mangalam
Sr. Nirmala Balaiah
Sr. Lumina Trafita
Sr. Nuthan Mary Jan

2nd Sr. Clara Selvaraj

5th Sr. Maria Goretti Lilly

6th Sr. Soundari Ebenezer

8th Sr. Amalorpavam T.

10th Sr. Smitra Nayak

12th Sr. Gnana Mary Durairaj

13th Sr. John Pauline Elizabeth

14th Sr.Nirmala Mary Zacharias
Sr. Sasikala

15th Sr. Amali Vedha

17th Sr. Jayaseeli Absalem A.
Sr. Deva Thiraviam
Sr. Elizabeth Reena

18th Sr.  Xavier Jeyarani

19th Sr. Reena Pradhan

21st Sr. Helen Mercy Jacquline Mary

23rd Sr. Emerentia
Sr. Clement Vimala

24th Sr. Josephine Pricilla

25th Sr. Sr. Mary Shaila Ruby
Sr. Sheela Mary G
Sr. Baby Sheela
Sr. Lakshmi Prabha

26th Sr. Mary Christina

27th Sr. Mary Theophila

28th Sr. Anne Irudaya Mary

30th Sr. Kulandai Theresa D.

31st Sr. Mary Raymond
Sr. Shantha Kabila




Be happy & Stay blessed

# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Febronia | 01.01.1985 |
| Sr. Mary Bridget | 06.01.1943 |
| Sr. Mary Ignatius | 07.01.1959 |
| Sr. Mary Bertile | 07.01.1987 |
| Sr. Mary Vincent | 07.01.2018 |
| Sr. Mary Gabriel | 10.01.2017 |
| Sr. Mary Gratia | 12.01.2008 |
| Sr. Stella Kunnath | 12.01.2018 |
| Sr. Mary Victoria | 16.01.1953 |
| Sr. Mary Magdalane | 19.01.1921 |
| Sr. Maria Goretti | 23.01.2019 |
| Sr. Mary Euphrasia | 28.01.2001 |
| Sr. Mary Martha | 29.01.2000 |
| Sr. Mary Emelda | 29.01.2012 |
| Sr. Mary Athanasia | 29.01.2020 |
| Sr. Mary Juliana | 31.01.1999 |
| Sr. Mary Clara | 31.01.1951 |
| Sr. Mary Boniface | 11.01.2024 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

*வேண்டுகோள்!*



"உறவே நீ பேசு" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 68 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*



Diamond Jubilee Celebration of St. Dominic Hr. Sec. School Perambalur

Christmas Celebration with the Transgender Community







Christmas with Sick Sisters

Christmas with Novices





Christmas with FSJ - FIT Foundation Students



Thanks Giving Mass - Thomas Foundation



Christmas wish to Tamil Nadu Chief Minister



Christmas wish to Jeppiaar Collage



New Toilet Block Blessing & Christmas Celebration at Ramapuram

Printed By: St. Joseph's Press, Mugalivakkam, Ch - 125. 9150 911 252 / 9003 057 997